The Members of the Congress Legislature Party then staged a walk-out.

Mr. SPEAKER : Now, with regard to my ruling on the breach of privilege against the hon. Member Mr. Martin, it is quite evident that he has misrepresented the proceedings of this House and in making that misrepresentation he has also made certain allegations against the Speaker as to what happend on the 11th July, which are not true. It was open to the hon. Mmeber to say that he did not observe the word 'ponravargal' and finish that matter. The hon. Leader of the Opposition and the Member still contended that it was the same passage. 'Same' according to the dictionary means 'identical', 'unchanged' 'unvarying'. It is quite evident that in saying that this passage is the same, he was altogether incorrect and therefore I hold that a *prima facie* cas e has been made out and I refer this matter of privilege against the hon. Memeber Mr. Martin under Rule 192 to the Committee of Privileges.

As regards the motion of privilege against the 'Murasoli', the hon. Member Mr. Martin has alleged that the same passage has occurred. It is quite evident by reading merely the world 'ponravargal' that the passage is different. The only ground on which this privilege matter is raised is that it is the same passage. When it is not the same passage, there is no case of breach of privilege. I hold that there is no case of breach of privilege against the 'Murasoli'.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மேட்டூரில் உள்ள மதருஸ் அலுமினியத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலைநீக்கமும் உண்ணாநோன்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அருள்கூர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானங்களை வாசித்து மட்டும் விட்டுவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என்று ஏற்கனவே தெரிவித்திருந்தும், அவர்கள் தீர்மானத்தை அவையில் வாசிப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதை வாசிப்பதற்கு அவருக்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

***திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, மேட்டூரில் உள்ள மதருஸ் அலுமினியத் தொழிற்சாலையில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் சங்கம் ஏற்படுத்திக்கொண்ட காரணத்தால் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர்களைப் பழி வாங்க முற்பட்டது. இதைத் தொடர்ந்து வேலை நிறுத்தமும் சமரச முயற்சிகளும் பல தடவைகள் நடந்தன. இவையெல்லாம் வெற்றி பெறவில்லை. பழிவாங்கும் நோக்கத்துடன் நிறுத்தப்பட்ட 78 தொழிலாளர்கள் இன்னும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் தொழிற்சாலைக்கு வெளியே துன்பங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் அலுமினியம் தொழிலாளர் சங்கத்தின் உப தலைவர் திரு. துரையப்பனும், நிர்வாக உறுப்பினர் திரு. மாணிக்கமும் தொழிற்சாலைக்கு முன்னால் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி காலை முதல் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

மேட்டூர்ப் பகுதி, தொழிலாளர் பிரதேசமாக இருப்பதாலும், உண்ணாவிரதத்தின்மூலம் தொழிலாளர்களின் உணர்வுகள் தட்டி எழுப்பப்படுமாதலாலும், இது பொது ஜன முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக உள்ளது.

அதனால் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் தொழில் அமைதி நிலவுவதற்கும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்ணுநோன்பு, வேலை நிறுத்தம் ஆகிய இரண்டு காரணங்களுக்காகப் பேரவையின் விவாதங்களைத் தள்ளி வைக்கத் தேவையில்லை என்று பல தீர்ப்புகளைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க எனது இசைவைக் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கோவை பொறியியற் கல்லூரியில் "ராகிங்" (Ragging) காரணமாக மாணவர் தற்கொலை.

*Dr. H. V. HANDE : Mr. Speaker, Sir, I have given notice that this House stands adjourned to discuss a matter of urgent public importance namely the suicide by Sri V. Govindaraju, a first-year B.E. student in Coimbatore on 11th July 1967. He is alleged to have found himself unable to withstand the ragging by the senior students and hence was found hanging in his hostel room. Sir, I request you to allow this House to discuss this tragedy, though I do believe that ragging in small doses has its own advantage namely creatingstronger men who can face public life. But now it has gone beyond all control and we are answerable to the parents. Even if the Hon. the Chief Minister or the Leader of the House can give us some assurance, I am prepared to withdraw this adjournment motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்களேயும், அவர்களுடைய தீர்மானத்தைப் படித்துவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தின்மீது சபையில் விவாதிப்பதற்குச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படி கேட்டு ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறேன்.

"கல்லூரிகள் திறக்கப்படும் இச்சமயத்தில் புதிய மாணவர்களைத் துன்புறுத்தி வரவேற்பு அளிக்கும் வகையிலான "ராகிங்" என்னும் இந்த முறைக்கு ஆளாகி, கோவை என்ஜினீயரிங் கல்லூரி ஒன்றின் முதலாண்டு மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிய வருகிறது. இது போன்ற சம்பவங்கள் இனியும் நிகழாவண்ணம் தடுக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோவைக் கல்லூரியில் நடைபெற்ற இந்தத் துன்பகரமான நிகழ்ச்சி காலை செய்தித் தாளில் வந்தது. அதிலே கோவைக் கல்லூரி ஒன்றில் என்று இருக்கிறதே தவிர, எந்தக் கல்லூரி என்று தெளிவாக இல்லை. செய்தி வந்தவுடனேயே தொழில் நுட்பக் கல்வி இயக்குநரை அழைத்து இதுபற்றிக் கேட்டேன். அவரும் எந்தக் கல்லூரி என்று தெரியவில்லை, அதுபற்றி விசாரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதோடு கல்லூரிகளில் "ராகிங்" கூடாது என்று சுற்றறிக்கை விடப்பட்டு சென்னை பொறியியல் கல்லூரியில் அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்கெனவேயும் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தினால் தற்கொலை நிகழ்ச்சி ஏற்பட்டது என்ற முழு விவரங்களும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. எந்தக் கல்லூரி என்றும் தெரியவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து, "ராகிங்" காரணமாக இருந்தால், இதற்குக் காரணமான மாணவர்கள் யார் என்று கண்டு அறியும்படி தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு ஆணை பிறப்பித்துள்ளேன், அவரும் அதற்கான